# வாதைகள்

## சகோ. பிரன்ஹாம் அவர்களின் மேற்கோள்கள்

(படங்களுடன்)

# இந்நாட்களில் ஒன்றில், தெய்வீக சுகமளித்தலானது ஜனங்கள் மத்தியில் ஒரு மகத்தான காரியமாக இருக்கப் போகிறது

வில்லியம் மரியன் பிரன்ஹாம்

# செய்தி: தேவனால் அருளப்பட்ட சுகமளித்தலின் வழி, ஜூலை 19, 1954

நம்முடைய நேரம் போய்க் கொண்டிருக்கையில், இதோ துரிதமாக, ஒரு காரியத்தை நான் கூறட்டும். கவனியுங்கள், கடைசி நாட்களில், அவர்கள் (வைரஸ்) கிருமிகளைக்கொண்டு போர்தொடுப்பார்கள் (germ warfare) என்று வேதாகமம் முன்னுரைக்கிறது என்பதை அறிவீர்களா? அந்த

வியாதிகள் ஜனங்கள் மேல் வெடித்து கிளம்பி, பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானம் இல்லாத எல்லார் மேலும் விழும் என்பது தெரியுமா? ஆனால் அந்த தூதனிடம் அல்லது இந்தக் கொள்ளை நோய்களின் மேல் உத்தரவைக் கொண்டிருந்த தூதனிடம், முத்திரை தரித்திருந்த யாதொருவனையும் தொடக்கூடாது என்ற கட்டளை கொடுக்கப்பட்டிருக்கிறது. ஏன், சகோதரர்களே, சபையானது அந்த நிலையில் இருக்கும்படி, அதைக் கொண்டுவரும்படி, அம்மாதிரியான போதகர்களை நாம் எவ்வளவாக கொண்டிருந்தாக வேண்டும்? நோய்

தடுப்பாற்றல் (Immune - நோய் எதிர்ப்பு சக்தி).

மஞ்சள் காய்ச்சல் (கடுமையான தொற்று வியாதி – தமிழாக்கியோன்) மற்றும் அதைப் போன்றவைகளிலிருந்து பாதுகாக்க முயற்சித்து, மருத்துவர்கள் என்னுடைய கைகளில் ஊசிகளை குத்தின இடம் இப்பொழுதும் புண்ணாக உள்ளது. எனக்கு அது தேவையில்லை என்று அவர்களிடம் கூறினேன். ஆனால் அவர்கள் அதைக் கேட்கவில்லை. ஆனால் தேவன் என்ன செய்யப் போகிறார் என்று நான் உங்களுக்குக் கூறுவேன். தேவனிடம் ஒரு நிணநீர்

(serum) உள்ளது, அது பரிசுத்த ஆவி என்று அழைக்கப்படும். அந்த நிணநீர் உள்ளே செல்லும்போது, அதுதான் உங்களை அதிலிருந்து பாதுகாக்கும். அல்லேலூயா. கடைசி நாட்களில்...

43. 1937-ம் ஆண்டில் வெள்ளப்பெருக்கின் போது, ஒரு சமயம் நடந்த காரியம் எனது நினைவுக்கு வருகிறது; எல்லாருமே டைபாய்டு ஊசிகளைப் போட்டிருந்தார்கள். இந்நிலையில், நானோ அதிலிருந்து தப்பித்துக்கொண்டிருந்தேன். அப்போது நான் மின்சார கம்பி முதலியவற்றைப் பழுது பார்த்துப் பேண வேண்டிய பொறுப்புடைய

(lineman) ஒருவனாக இருந்தேன், எனவே நான் வெளியேறி, போய்விட்டேன். யாரோ ஒரு மனிதர் மேலே நடந்து வந்து, “நீர் இன்னும் உம்முடைய ஊசிகளைப் போட்டுக்கொள்ளவில்லையா?” என்று கேட்டார்.

அதற்கு நான், “ஓ, ஆமாம். எனக்கு ஊசிபோடப்பட்டு விட்டது” என்று கூறினேன்.

அவர், “நீர் ஊசி போட்டுவிட்டீர். அது உம்மை நோய்வாய்ப்படுத்தியதா?” என்று கேட்டார்.

நான், “ஓ, இல்லை. இல்லை, நிச்சயமாக அது

நோய்வாய்ப்படுத்தவில்லை" என்று கூறினேன்.

அவர், "நீர் எப்போது ஊசி போட்டுக்கொண்டீர்?" என்று கேட்டார்.

நான், "ஓ, ஏறக்குறைய மூன்று வருடங்களுக்கு முன்பு" என்றேன்.

"மூன்று வருடங்களா? நல்லது, நீர் வேறொரு ஊசியைப் போட்டுக்கொள்ள வேண்டும்" என்றார்.

நான், "ஏறக்குறைய ஒவ்வொரு மணிநேரமும் நான் ஒன்றைப் போட்டக்கொண்டு தான் இருக்கிறேன்" என்றேன். சகோதரனே, நான்... சரி. நான்

அப்படியே தொடர்ந்து அவரிடம் பேசிக் கொண்டேயிருந்தேன்.

44. ஆனால் பார், நண்பனே, அங்கே ஒரு சபை எழும்பும் அந்த நேரம் வருகிறது. நமக்கு தெய்வீக சுகமளித்தலுக்கே விசுவாசத்தைக் கொண்டிருக்க முடியாவிட்டால், எடுத்துக்கொள்ளப்படுதலுக்கேற்ற விசுவாசத்தை நாம் எவ்வாறு கொண்டிருக்கப் போகிறோம்? நண்பனே, நாம் வெளியே போயாக வேண்டும். நாம் இருக்கிற இந்தப் பழைய, மந்தமான சபையின் நிலையை விட்டு வெளியே வந்தாக வேண்டும். நாம் இதிலிருந்து விலகிச் சென்று, நாம் செய்து கொண்டிருக்கும்

காரியங்களிலிருந்து மிகவும் வித்தியாசமான ஒரு காரியத்தைச் செய்யத் தொடங்குவோம் (Launch out). கரையோடு இணைக்கும் கயிறுகளை (shorelines) வெட்டி எறிந்து விட்டு, பயம் மற்றும் சந்தேகத்தின் உணர்வுகள் எல்லாவற்றையும் இழந்து, யாவும் கைகூடும் ஏதோவொரு இடத்திற்குள் வெளியே வந்துவிடுவோம், அங்கே வெளியே உங்களால் எவ்வளவு கட்டற்றவிதமாக விடுதலையோடு இருக்க முடியுமோ அவ்வளவு விடுதலையாக வந்துவிடுவோம், சகோதரனே. நீங்கள் உங்கள் கப்பற்பாயை (sail) பரலோகத்தை

நோக்கி பொருத்தி விட்டீர்கள், எதுவுமே உங்களை எந்தவிதத்திலும் கலக்கவே முடியாது. நீங்கள் அந்த வழியாகப் போய்விட்டீர்கள்; அவ்வளவு தான். எதுவுமே உங்களுக்கு தீங்குசெய்ய முடியாது.

இப்பொழுது, வேதாகமத்தின்படி, இந்நாட்களில் ஒன்றில், அது அந்தவிதமான சபையாகத்தான் இருக்கப் போகிறது. (வேதாகமத்தில்) அங்கே அந்தத் தூதன் அவருடைய கோபாக்கினையை ஊற்றி, வியாதிகள் வெடித்துக்கிளம்பின போது, மனிதர்கள் தாங்கள் நின்று கொண்டிருக்கும் இடத்திலேயே அவர்களுடைய மாமிசமும் (flesh – சதை, உடம்பு, தசை –

தமிழாக்கியோன்) கூட அழுகிப்போய்விடும். ஆகாயத்துப் பறவைகள் இறங்கிவந்து, தலைமை படைத்தலைவர்கள் (chief-captains – தலைமை அதிகாரிகள், தலைமைப்பணியாளர்கள், தலைமை படைப்பிரிவுத் தளபதிகள், தலைமை கடற்படைத்தளபதிகள், தலைமை இராணுவத் தலைவர்கள், தலைமை கப்பற்குழு முதல்வர்கள்), மற்றும் மகத்தான மனிதர்கள், ஜனாதிபதிகள் (presidents - குடியரசுத்தலைவர்கள், கூட்டத்தலைவர்கள், மன்றத்தலைவர்கள், அவைத்தலைவர்கள், தலைமை அதிகாரிகள், அரசுத்தலைவர்கள்,

தலைவர்கள்), யுத்தவீரர்கள் (warriors - மாவீரர்கள், போர்வீரர்கள், படைவீரர்கள்), இராஜதூதர்கள், (diplomats - ராஜ்யப்பிரதிநிதிகள், அரசு தூதர்கள்), ஆட்சியாளர் (potentates - வல்லுநர்கள், ஆட்சி செய்பவர்கள், ஆளுநர்கள், அதிபதிகள், ராஜாக்கள்), மற்றும் எல்லாருடைய புயங்களையும் (shoulders - தோள், தோட்பட்டை, தோட்பட்டை இறைச்சி, தோட்கட்டு, புஜம்), படிப்படியாக தின்று அழிக்கும் (eat off), மேலும் அவர்களுடைய மாமிசத்தையும் தின்னும். தின்னும்... ஆனால், “தங்கள் நெற்றியில் தேவனுடைய

முத்திரையைப் பெற்றிருக்கிற யாருடைய அருகிலும் வராதே" என்று அந்த தூதனுக்கு கட்டளையிடப்பட்டிருக்கிறது. அது ஒரு... இருக்கப் போகிறது. இந்நாட்களில் ஒன்றில், தெய்வீக சுகமளித்தலானது ஜனங்கள் மத்தியில் ஒரு மகத்தான காரியமாக இருக்கப் போகிறது. எனவே நாம் நிபந்தனைக்குள் வந்துவிடுவோம். நாம்... என்று தேவன் விரும்புகிறார்.

நீங்கள், "நல்லது, சகோதரன் பிரன்ஹாமே, நீங்கள், 'நாம்' என்று கூறுகிறீர்களே" என்று சொல்லலாம். அதன்பேரில் தான் தேவன் காத்துக் கொண்டிருக்கிறார். தேவன்... நாம் இயேசு திரும்பி வருவதற்காக

காத்துக் கொண்டிருக்கிறோம், இயேசுவோ நம்பேரில் காத்துக் கொண்டிருக்கிறார். நீங்கள், "நல்லது, எவ்வாறு, அதைக் குறித்து நம்மால் என்னதான் செய்ய முடியும்?" என்று கேட்கலாம்.

வேளை வந்தது என்றும், அவருடைய மணவாட்டி தன்னை ஆயத்தம் செய்து விட்டாள் என்றும் (அல்லேலூயா.), அவள் தன்னை ஆயத்தம் செய்து விட்டாள் என்று வேதாகமம் கூறுகிறது.

★★★★★

(குறிப்பு: இந்தச் செய்தியின் இறுதி திருத்தம் இன்னும் முடியவில்லை. இது புத்தகமாக அச்சிடும் போது, இறுதி திருத்தம் செய்து வெளிவரும்.)

## தேவனுடைய முத்திரையானது என்ன? அது பரிசுத்த ஆவியாகும். அது சரி



## வில்லியம் மரியன் பிரன்ஹாம்

---

## செய்தி: 60-12-11M பத்து கன்னிகைகள்

---

281. உங்களுக்கு அறிந்து கொள்ள சந்தர்ப்பம் ஏற்பட்டால், மிருகத்தின் முத்திரை எங்ஙனம் பெற்றுக்கொள்ளப்படுகிறது என்பதை அறியுங்கள். நான் இதைப்பற்றிக் கூற விரும்புகிறேன். ஏனெனில், அதைப்பற்றிக் கூறிவிட்டு முடித்துவிடலாம் என்று நான் எண்ணினேன். எவ்வாறு மிருகத்தின் முத்திரையானது பெறப்படுகிறது? அதை நீங்கள் அறிந்துகொள்ள விரும்புகிறீர்களா? அதன் விளைவுகள்

என்ன? மிருகத்தின் முத்திரையானது என்னவாயிருக்கிறது?



282. எது தேவனுடைய முத்திரையாயிருக்கிறது என்பதை நாம் அறிவோம். தேவனுடைய முத்திரையானது என்ன?

நல்லது, எபேசியர் 4:30ஐ எடுத்துக்கொள்வோம். அதைப்பற்றி அங்கே நீங்களே படித்துத் தெரிந்து கொள்ளலாம். உங்களில் யாராவது வெளிப்படுத்தின விசேஷம் 9:1–4ஐ

எடுக்கலாம். இன்னொரு வசனம் 2 கொரிந்தியர் 1:2. அதைப் பற்றி பல இடங்களில் உள்ளது. அவைகளில் சிலவற்றை நான் குறித்து வைத்துள்ளேன்.

ஆனால் நாம் எபேசியர் 4:30ஐ எடுத்துக்கொண்டு, அங்கே நீங்கள் தேவனுடைய முத்திரையானது என்னவென்று கண்டுகொள்ளலாம். வேறு பல வசனங்களிலும் இதைப் பற்றிக் காணலாம். முத்திரை என்ற வார்த்தையை நீங்கள் எடுத்துக்கொண்டு, உங்களது ஒத்தவாக்கிய அகராதியில் ஆராய்ந்து பார்த்துக்கொள்ளலாம். எபேசியர் 4:30 – இதைக் கவனியுங்கள்.



**"அன்றியும், நீங்கள் மீட்கப்படும் நாளுக்கென்று முத்திரையாகப் பெற்ற தேவனுடைய பரிசுத்த ஆவியைத் துக்கப்படுத்தாதிருங்கள்."**

எபே. 4:30

**283.** **தேவனுடைய முத்திரையானது என்ன? அது பரிசுத்த ஆவியாகும். அது சரி.** "தேவனுடைய ஆவியைப் பெற்றிராதவன் என்னுடையவனல்ல என்று தேவன் கூறியுள்ளார் **நீங்கள்**

**பரிசுத்த ஆவியைப் பெற்றிருந்தால், நீங்கள் தேவனுடைய பாகமாக இருக்கிறீர்கள். ஏனெனில் நீங்கள் அவருடையவர்களாக இருக்கிறீர்கள்.**

**அவர் உங்களை முத்திரையிட்டு, உங்களில் இருக்கிறார், உங்களில் கிரியை செய்துகொண்டு இருக்கிறார்.**

**அவர் செய்த அடையாளங்களை நீங்களும் செய்கிறீர்கள்.**



வேதத்தைக் கற்கும் வகுப்பில் இங்கு உள்ளோரே, நீங்கள் ஒவ்வொருவரும் இதைப் புரிந்து கொண்டுவிட்டீர்களா?

**தேவனுடையவர்களாக ஆவதற்கு பரிசுத்த ஆவியே தேவைப்படுகிறது. பரிசுத்த ஆவிதான் தேவை.**

**அவ்வாறு நீங்கள் பரிசுத்த ஆவியையுடையவர்களாக இருப்பின், இயேசு செய்த அதே கிரியைகளை நீங்களும் செய்கிறீர்கள்.** பார்த்தீர் களா? உங்களுடைய அன்பானது...

................................................................

# தேவனுடைய முத்திரையைத் தரித்திருப்பவர்களை அந்த பயங்கரமான வியாதி தொடக்கூடாது என்று தடை விதிக்கப்பட்டுள்ளது

வில்லியம் மரியன் பிரன்ஹாம்

# செய்தி: **புத்திரசுவிகாரம், பாகம் - 4**, மே 22, 1960

46. புற்றுநோய் பயங்கரமானது என்னும் கருத்தைக் கொண்டிருக்கிறீர்களா?

ஒரு நாள் வரப்போகிறது. அப்பொழுது மனிதரின் மாமிசம் அழுகி, அவர்கள் மரிப்பதற்கு முன்பே பருந்துகள் அவர்களுடைய மாமிசத்தைத் தின்னத் தொடங்கும் என்று வேதம் கூறுகின்றது.

அதனுடன் புற்றுநோயை ஒப்பிட்டுப் பார்க்கும் போது, புற்றுநோய் சாதாரண பல்வலியைப் போன்றது.

ஆனால், தேவனுடைய முத்திரையைத் தரித்திருப்பவர்களை அந்த பயங்கரமான வியாதி தொடக்கூடாது என்று தடை விதிக்கப்பட்டுள்ளது.

அந்த பயங்கரமான வாதைகள் ஜனங்களைத் தாக்குவதற்கு முன்பே நாம் உள்ளே நுழைந்து, தேவனுடைய ராஜ்யத்தில் நமது ஸ்தானத்தில் பொருத்தப்பட வேண்டும் என்று ஆவல் கொண்டிருக்கிறோம்.

ஓ, எவ்வளவு அருமையாயுள்ளது! காலங்கள், காலங்கள் நிறைவேறுதல், சுதந்தரம். நாங்கள் முன்குறிக்கப்பட்டு, கிறிஸ்துவுக்குள் அவருடைய சுதந்தரமாகும்படி தெரிந்து கொள்ளப்பட்டோம்.

★★★★★

# சபையைத் தாக்குகிற கடைசி வாதை



சகோ. பிரன்ஹாம் பேசிய செய்தியிலிருந்து

# செய்தி: தேவனால் அருளப்பட்ட பாதை,

## டிசம்பர் 1, 1953

112. சரி. நீங்கள் இதைக் கவனிக்க விரும்புகிறேன். அதன்பிறகு அவன், "நீங்கள் இந்த ஆட்டுக்குட்டியை எடுத்து, சாயங்கால நேரத்தில் அதைக் கொல்ல விரும்புகிறேன்" என்றான், கிறிஸ்துவுக்கு பரிபூரண முன்னடையாளம், அவர் சாயங்காலத்தில் கொல்லப்பட்டார். அப்போது இஸ்ரவேலின் முழு சபையாரும் மரணத்திற்கு சாட்சிகளாக இருந்தார்கள். அவர்கள் கிறிஸ்துவில் செய்தார்கள். இரத்தமானது கதவின்

மேல் பூசப்பட வேண்டியிருந்தது, அந்த இரவில், மரண தூதன் தேசத்தில் சவாரி செய்து வந்து, இரத்தம் இல்லாத எல்லாவிடங்களிலும் மரணம் இருக்கப் போவதாக இருந்தது.

113. சகோதரனே, நான் இதை உங்களுக்குச் சொல்லுகிறேன், தேசத்தில் மரண தூதன் எப்பொழுதாவது சவாரி செய்து கொண்டிருக்கிற ஒரு நேரம் இருந்திருக்குமென்றால், அது இன்றிரவு தான். ஆசாரியன் நின்று கொண்டிருக்கிற சபை வாசலுக்கு அவன் வருகிறான். இரத்தத்தையும் இயேசுவின் வல்லமையையும் மறுதலித்துக் கொண்டும், தொடர்ந்து போய்க் கொண்டிருக்கும் ஒரு சபை, "தேவனுடைய மகிமை விலகிப்

போய்விட்டது," மரண தூதன் உள்ளே செல்கிறான், அதோடு அது முடிந்து விடுகிறது. அப்பொழுது அவர்கள் சடங்காசாரமாகவும் (formal), மரித்தவர்களாகவும், தேவனுடைய வல்லமையை மறுதலிக்கிறவர்களாகவும் ஆகி விடுகிறார்கள். முதலாவது காரியம் என்னவென்று தெரியுமா, அந்த முழு கூட்டத்தினர் மேலும் மரணம் மூடிக்கொள்கிறது. நீங்கள் ஒருபோதும் அவர்களை விசுவாசிக்கும்படி செய்யவே மாட்டீர்கள். அவர்களால் அதை விசுவாசிக்க முடியாது.

114. இப்பொழுது, இந்த மரண தூதனைக் கவனியுங்கள். என்னால் அந்த தகப்பனைக் காண முடிகிறது. இப்பொழுது, இப்பொழுது, அவர்கள்

திடமாக விசுவாசித்து எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்கள், சூரியன் அஸ்தமித்து, இருள் வரத் தொடங்கின போது, அவர் ஒருமுறை அந்த ஆட்டுக்குட்டியின் இரத்தத்தின் கீழாக வந்து, அணிவகுத்துச் செல்வதற்கான உத்தரவு கொடுக்கப்படுவது வரையில், அவர்கள் அங்கே கீழேயே தங்கியிருக்க வேண்டியிருந்தது. சகோதரனே, இப்பொழுது, நசரீன்களாகிய உங்களுக்கு இது நன்மையானதாக இருக்கும்.

115. கவனியுங்கள், இரத்தத்தின் கீழாக வருதல்... ஒருமுறை இரத்தத்தின் கீழாக வந்து, அதை கதவின் மேற்சட்டத்திலும், நிலைக்காலின் மேலும் தெளித்தல். ஆனால் ஒரு மனிதன் அந்த வாசல் வழியாக இந்த

வீட்டிற்குள் வரும் ஒவ்வொரு தடவையும், எகிப்தை விட்டு வெளியே அணிவகுத்துப் போகும்படியான உத்தரவுகள் வரும் வரை, அவன் அங்கேயே தங்கியிருந்தான். எனக்கு அது பிடிக்கும். அங்கே தங்கியிருத்தல்.

116. அந்த இரவில் விருந்து கொண்டாட்டங்களுக்குப் (parties) போய்க் கொண்டிருந்த அந்த வாலிப பெண்கள் இஸ்ரவேலின் சிறு வாலிப பெண்களிடம், "ரெபேக்காளே, வேகமாக வா" என்றும், மற்றும் அதைப்போன்ற காரியங்களையும் கூறிக் கொண்டிருப்பதை என்னால் காண முடிகிறது, "ரெபேக்காளே, வேகமாக வெளியே வா, நாங்கள் ... போய்க் கொண்டிருக்கிறோம்."

117. “என்னால் வர முடியாது.”

118. “ஏன்?”

119. “நல்லது, நாங்கள் இரத்தத்தின் கீழிருக்கிறோம்.” ஓ, என்னே. “நாங்கள் இரத்தத்தின் கீழே இருக்கிறோம்.”

120. “ஓ, விரைவாக வா, நாம் போவோம். முட்டாள்தனம், அங்கிருக்கும் உன் அப்பாவிடம் உள்ள அந்தப் பழங்கால பைத்தியக்கார மார்க்கம்.”

121. “ஆனால் கவனி, நான் கட்டாயம் அந்த இரத்தத்திற்கு அப்பால் போகக் கூடாது என்று என் இருதயத்திலுள்ள ஏதோவொன்று என்னிடம் கூறுகிறது.”

122. அவர்கள் தொடர்ந்து தங்கள் பெரிய விருந்து கொண்டாட்டங்களுக்கும் (parties) மற்றவைகளுக்கும் போய்விட்டார்கள். அதன்பிறகு அங்கே அதனூடாக, ஏறக்குறைய நள்ளிரவில், ஒரு வினோதமான உணர்ச்சி வரத் தொடங்கியது, அது இப்பொழுது மறுபடியுமாக உலகத்தின் மேல் வந்து கொண்டிருப்பது போன்று இருந்தது, நாம் அதைக் குறித்து சற்று முன்பு பேசினோம். ஏதோ தவறாக உள்ளது: மகா துயரார்ந்த மந்தமான இருள் பூமியின்மேல் வந்திறங்கியது; காற்று வீசத் தொடங்கினது. நாம் போகப்போகிற இடமாகிய இங்கேயிருக்கும் இந்த வீட்டிற்குள் இருக்கிற இந்தச் சிறு பையனை

என்னால் காண முடிகிறது. அவனைப் பாருங்கள், அவன், “அது என்னவென்று சொல்லுங்கள்? நான்-நான்-நான் ஒருவிதத்தில் வினோதமாக உணருகிறேனே. நடனம் ஆடிக் கொண்டிருந்த வாலிப பெண்கள் எல்லாம், வீட்டிற்கு வேகமாக போய்க் கொண்டிருப்பதைப் பார்க்கிறேன்” என்று கூறுகிறான்.

123. ஓ, என்னே. அப்போது ஜெபம் பண்ண மிகவும் கால தாமதம் ஆகிவிட்டது. இப்பொழுது, முதலாவது காரியம் என்னவென்று தெரியுமா, அவன்-அவன் சுற்றும் முற்றும் பார்க்கத் தொடங்கினான் - தொடங்குகிறான். அந்தச் சிறு பையன், “அப்பா, வீட்டிலுள்ள மூத்த மகன்

கொல்லப்படப் போகிறான் என்று வார்த்தை சொல்லுகிறது?" என்று கேட்பதை என்னால் கேட்க முடிகிறது.

124. "ஆமாம்."

125. "நல்லது, அப்பா, நம்முடைய வீட்டைக் குறித்து என்ன?"

126. "மகனே, நாம் எவ்வளவு பாதுகாப்பாக இருக்க முடியுமோ அவ்வளவு பாதுகாப்பாக இருக்கிறோம்."

127. "நீங்கள் பாதுகாப்பாக இருக்கிறீர்கள் என்று உங்களுக்கு எப்படித் தெரியும்?"

128. "நாம் தேவனுடைய வார்த்தைக்குக் கீழ்ப்படிந்திருக்கிறோம்.

நாம் பெற்றிருக்கிறோம்... நாம் இரத்தத்தின் கீழே இருக்கிறோம்."

129. அவன் கூறுவதை என்னால் கேட்க முடிகிறது, சற்று கழிந்து... கொஞ்சம் கழித்து, நான் ஜன்னலுக்கு வெளியே பார்க்கிறேன், அந்தச் சிறு பையன் ஜன்னலுக்கு வெளியே பார்க்கிறான், அவன் கவனித்தபோது, அதோ இரண்டு பெரிய கறுத்த செட்டைகள் ஆகாயத்தினூடாக வந்து கொண்டிருக்கிறது. அதுதான் மரணம். அங்கே எந்த நேரத்திலாவது கறுத்த செட்டைகள் தேசத்தைத் தாக்குவது உண்டானால், அது இன்றுதான்: நாம் பூமி அதிர்ச்சிகளை உடையவர்களாயிருக்கிறோம்; நாம் சாவைக் கொண்டுவருகிற கொள்ளைநோய்களைக்

கொண்டிருக்கிறோம்; இந்த தேசத்தில் வரக்கூடிய எல்லாவிதமான காரியங்களையும் நாம் கொண்டிருக்கிறோம்; அவர்கள் எகிப்தில் செய்தது போன்றே தொடர்ந்து நடந்து கொண்டிருக்கிறது. ஆனால் அழிவுக்கு முன்பாக எகிப்தைத் தாக்கிய கடைசி வாதை மரணமாக இருந்தது. சபையைத் தாக்குகிற கடைசி வாதை ஆவிக்குரிய மரணமாக இருக்கிறது. அதுதான் கடைசி காரியமாக இருக்கிறது.

130. அவர்கள் மரித்துக்கொண்டிருக்கிறார்கள், சபைகள் முற்றிலுமாக மரித்துக்கொண்டிருக்கின்றன. ஆகிக்கொண்டிருக்கிறோம், நாம், ஓ, நாம் நீடித்தக் கூட்டங்களை

கொண்டிருக்கத்தான் செய்கிறோம், ஆனால் எந்த எழுப்புதலும், எழுப்புதல் இல்லை.

131. அவர்கள், "அமெரிக்காவில் பெரிய எழுப்புதல்..." என்று கூறுகிறார்கள்.

132. அது எங்கேயிருக்கிறது என்று எனக்குச் சொல்லுங்கள் பார்க்கலாம். எழுப்புதல் எங்கே? அமெரிக்காவில் ஒரு எழுப்புதலின் முதலாவது கட்டம் கூட தாக்கவில்லை. அதற்கு காரணம் என்னவென்றால், பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானத்தின் மூலமாக அவர்களைத் திரும்ப தேவனால் அருளப்பட்ட பாதைக்குக் கொண்டு வந்து, கல்வாரி பாதையின் மூலமாக அவர்களைத் திரும்பவும் தேவனிடத்திற்கு அனுப்புவதற்குப்

பதிலாக, நாம் மனிதனுடைய வேதசாஸ்திரத்தையும் மற்றும் காரியங்களையும் போதிக்க முயற்சிக்கிறோம். நாம் அவர்களை சபைக்குள் கொண்டுவந்து, அவர்களைச் சபைக்குள் சேர்த்து, அவர்களை சபைக்குள்ளாக ஞானஸ்நானம் பண்ணி, சபைக்குள்ளே அவர்களுடைய கரங்களைக் குலுக்கி, சபைக்குள்ளே அவர்களுடைய கடிதங்களைக் கட்ட முயற்சிக்கிறோம்; ஆனால் அவர்கள் ஜீவனுள்ள தேவனுடைய சபையில் பிறந்தாக வெண்டும். அந்த காரணத்தினால் தான் நமக்கு எந்த எழுப்புதலும் இல்லாதிருக்கிறது.

133. நமக்கு என்ன அவசியமாயிருக்கிறது என்றால்,

மறுபடியும் பழைமை நாகரீகமான கலக்குதல் தான், அங்கே, பழங்கால ஜான் வெஸ்லி எழுப்புதல், அங்கே அவர்கள் நின்றுகொண்டு, இரவு முழுவதும் பிரசங்கம் பண்ணினார்கள், அப்போது பரிசுத்த ஆவியின் வல்லமை கேட்டுக்கொண்டிருந்த கூட்டத்தினரின் மேல் விழுந்து கொண்டிருந்தது. அதுதான் நமக்கு மீண்டும் அவசியமாயிருக்கிறது. ஆமென். நான் ஒருவிதத்தில் இப்பொழுது பக்திபரவசப்படுகிறேன். எனவே கவனியுங்கள், நண்பனே, நான் உங்களிடம் ஒரு காரியத்தைக் கூறட்டும். இந்த தேசத்திற்கு பெரிய தேவையாக இருப்பதைக் குறித்து நான் எண்ணிப்பார்க்கும் போது, நமக்கு இன்னும கூடுதலாக வேதாகமக்

கல்லூரிகள் அவசியமில்லை. நமக்கு இன்னும் அதிகமான பிரசங்கிமார்கள் தேவையில்லை. நமக்கு என்ன தேவையாயிருக்கிறது என்றால், நமக்கிருக்கிற பிரங்கிமார்கள் பரிசுத்த ஆவியால் நிறையப்படுவது தான். அதுதான் நமக்கு அவசியமாயிருக்கிறது. உண்மை, நான் இங்கே நின்று கொண்டிருக்கையில், அதுவே சத்தியமாக இருக்கிறது.

134. இப்பொழுது, நீங்கள் வேறு ஒரு காரியத்தைக் கவனிக்க வேண்டுமென்று விரும்புகிறேன். பிறகு, அந்தச் சிறு பையன், இந்தச் செட்டைகள் கீழே இறங்கி வருவதை கவனிக்கிறான், அது ஒரு வீட்டுக்குப் போன போது, அலறல் கூக்குரல் சத்தம் எழும்புவதைக் கேட்கிறான். ஆனால்

அந்தச் சிறு பையன், “அப்பா, அந்த இரத்தம் அங்கேயிருக்கிறது என்பதில் உமக்கு நிச்சயம் உள்ளதா?” என்று கூறுவதை என்னால் கேட்க முடிகிறதா?

135. அவன் வெளியே நடந்துவந்து, வாசல் மேல் நோக்கிப் பார்த்து, “ஆம், ஐயா, மகனே, அவள் மூடப்பட்டிருக்கிறாள்” என்று கூறுவதை என்னால் காண முடிகிறது.

★★★★★

**(குறிப்பு: இந்தச் செய்தியின் இறுதி திருத்தம் இன்னும் முடியவில்லை. இது புத்தகமாக அச்சிடும் போது, இறுதி திருத்தம் செய்து வெளிவரும்.)**











# அது தேவனுடைய வாதைகள்



## வில்லியம் மரியன் பிரன்ஹாம்

---

### செய்தி: 60-02-29 வருகின்ற புயல்

---

46. இந்த அற்புதமான குமாரனின் ஒளியில் இராதவர்களின் மாம்சத்தை ஆகாயத்துப் பறவைகள் பட்சிக்கும் காலம் ஒன்று வரும் என்று எனக்கு வேதாகமத்தில் கூறப்பட்டள்ளது, வியாதிகள் பாதையில் வந்து கொண்டிருக்கின்றன, மருத்துவர்கள் அதை தடுத்து நிறுத்தமுடியாது. அது தேவனுடைய வாதைகள்.



இன்று நமக்குள்ள மருத்துவர்களை காட்டிலும் அதிக திறன் பெற்றிருந்த எகிப்திய மருத்துவர்களால் தேவனுடைய வாதைகளைத் தடுத்து நிறுத்த முடியவில்லை.





அங்கிருந்த குறி சொல்பவர்களும், போலியாட்களும் அப்படி செய்ய முடியவில்லை.



தேவனுடைய ஜனங்களை ஆட்டுக்குட்டியின் இரத்தத்தின் கீழ் ஒன்றாக சேர்த்து வைக்க கோசேனில் தேவனுடைய வல்லமை அவசியமாயிருந்தது!



பரிசுத்த ஆவியே இன்று வாசல். பரிசுத்த ஆவியே இன்றைய பாதுகாப்பு.

★★★★★

# ஓ. சகோதரனே,
# நேரமுள்ள போதே நீ
# கோசேனுக்கு
# போய்விடுவது நல்லது



## வில்லியம் மரியன் பிரன்ஹாம்

---

## செய்தி: 65-08-15 இதை அறியாமலிருக்கிறாய்

---

**134.** இங்கு பாருங்கள். எனவே தேவனுடைய ஆவியினால் பிறந்த எந்த மனிதனும்... பாருங்கள், வெளிப்புற சரீரம் இங்குள்ளது. நான் ஆண்களும் பெண்களும் கலந்த கூட்டத்தினர் மத்தியில் பேசுகிறேன். ஆனால் உங்கள் போதகர் என்ற முறையில், உங்கள் சகோதரன் என்னும் முறையில் பேசுகிறேன். இங்கு சரீரம் உள்ளது. அது பலவீனமானது. அது அப்படித்தான் இருக்கும். ஒரு பெண் தெருவில் நடந்து செல்கிறாள். ஒரு

இளைஞன் 17,18,20,25,30 வயதுள்ளவன், அங்கு வருகிறான். இந்த பெண் தன் உடலை நெளித்துக் கொண்டு, உயரமான காலணிகளைப் போட்டுக்கொண்டு, முன்பாகமும், பின்பாகமும் உந்தித் தள்ளிக்கொண்டு வருவது போன்ற இறுக்கமான ஆடைகளை, அவள் முழங்கால்களுக்கு மேலேயுள்ள ஆடைகளை, அல்லது குட்டை கால்சட்டை அணிந்திருக்கிறாள். அவள் அப்படி நடந்து கொள்வாள் என்று வேதம் கூறுகின்றது என்று உங்களுக்குத் தெரியுமா? அவள் அசுத்தமாய் இருப்பாளென்று வேதம் கூறுவது உங்களுக்குத் தெரியுமா?



135. இந்த மாதம் ’ரீடர்ஸ் டைஜஸ்ட்’ படித்தீர்களா? மனிதரும் ஸ்திரீகளும் இப்படியாக... 20, 25 வயதான பெண்களுக்கு மாதவிடாய் நின்று விடுகிறதாம்.

விஞ்ஞானத்தின்படி வாழ்க்கையில் ஏற்படும் இந்த மாற்றம் நடுத்தர வயதில் நிகழவேண்டும்.

என் காலத்தில் அது 30 அல்லது 35 வயதில் உண்டானது.

என் தாயாரின் காலத்தில், ஒரு ஸ்திரீக்கு 40 அல்லது 45 வயதாகும் வரைக்கும் மாதவிடாய் நிற்பதில்லை.

அதன் காரணம் என்ன? விஞ்ஞானத்தின் மூலம் உற்பத்தி செய்யப்படும் கலப்படமான உணவு மானிட சரீரத்தையே குலைத்து விட்டது – நாம் அழிந்து போய்க் கொண்டிருக்கிறவர்களாகி விட்டோம்.

மானிட உடல் நிலைகுலைந்து காணப்பட்டால், அதிலுள்ள மூளை அணுக்களும் அந்நிலையில் தான் இருக்குமல்லவா?



136. இப்பொழுது, ஆவி இதை ஆமோதிப்பதை பாருங்கள்.

**கர்த்தரின் நாமத்தினால், ஒரு நேரம் வரப்போகிறது. அப்பொழுது ஜனங்கள் முழுவதும் பைத்தியம் பிடித்தவர்களாய் ஆகிவிடுவார்கள். வேதம் அவ்வாறு கூறுகின்றது.**

அவர்கள் பயத்தில் கூக்குரலிட்டு அலறுவார்கள் தங்கள் மனதில் பெரிய பயங்கரமானவைகளை கற்பனை செய்து கொண்டு. வானொலிகளும் தொலைகாட்சிகளும் அத்தகைய பயங்கரமான காட்சிகளை காண்பிக்கின்றன.

14 மரங்கள் உயரமுள்ள எறும்புகள் இப்பூமியில் தோன்றும். 4 அல்லது 5 மைல்கள் நீளமுள்ள சிறகுகள் கொண்ட பறவை பூமியில் பறந்து செல்லும், ஜனங்கள் அதைக் காண்பார்கள்.

அவர்கள் இரக்கத்துக்காக கதறி கூச்சலிட்டு அலறுவார்கள். அது வாதையாயிருக்கும். வாதைகள் உண்டாவதைக் குறித்து நான்

பிரசங்கிக்கும் வரைக்கும் காத்திருங்கள்.



137. மோசே என்ன செய்தானென்று பாருங்கள்— மனிதனாக, ஆவியாக அல்ல. அவர், மோசே...' என்றார். தேவன் மோசேயிடம், “அங்கு போ“ என்றார்

(அவருடைய தீர்க்கதரிசியிடம்), “கை நிறைய புழுதி எடுத்துக்கொண்டு அதை ஆகாயத்தில் எறிந்து, ’கர்த்தர் உரைக்கிறதாவது. பூமியில் வண்டுகள் தோன்றும்’ என்று சொல்“ என்றார்.



அப்பொழுது ஒரு வண்டும் இல்லை. முதலாவதாக ஏதோ ஒன்று

புதரில் மெல்ல நகர்வதைக் கண்டனர். பிறகு பார்த்தபோது, வேறு சில வண்டுகள் தோன்றின. சிறிது கழிந்து அவை மிக அதிகமாகப் பரவி, அதன் வழியாக நடக்கவே முடியவில்லை. அவை எங்கிருந்து வந்தன? தேவன் சிருஷ்டி கர்த்தர்! அவருக்கு சித்தமானதை அவர் செய்ய முடியும் அவர் இராஜாதிபத்தியம் உள்ளவர். அவர் பூமியின் ஒரு முனையிலிருந்து மறுமுனைவரைக்கும் சிறகுகளைக் கொண்ட ஒரு பறவையை சிருஷ்டிக்க முடியும்.





138. அவன் “ஈக்கள் உண்டாகக்கடவது” என்றான்.

அவை மிக அதிகமாகப் பெருகி, பூமி முழுவதையும் கம்பளம் போல மூடினது.

தேசத்தில் ஒரு ஈ கூட இல்லை. முதலில் ஒரு மாட்டு ஈ சுற்றிலும் பறந்து வந்தது. பிறகு 8,10,12, ஈக்கள் தோன்றின. அதன் பிறகு அதன் வழியாக யாரும் நடந்து செல்ல இயலவில்லை. சிருஷ்டி கர்த்தராகிய தேவன் தமது வார்த்தையை காத்துக் கொள்கிறார்.





139. தேவனுடைய கட்டளைக்கு இணங்கி மோசே தன் கோலை நீட்டி “தவளைகள் உண்டாகி பூமியை நிரப்பக்கடவது“ என்றான்.

தவளைகள் உண்டாகி, அவர்கள் அவைகளைக் குவியல் குவியலாகக் குவித்தனர்.

எங்கும் துர்நாற்றம்—ஒருக்கால் 40 அல்லது 50 அடிக்கு தவளை 'குவியல்.

அவை பார்வோனின் பாத்திர அலமாரிக்குள் நுழைந்தன .அவை... போர்வையைத் திருப்பினால் அதனடியில் 500 தவளைகள்.

அவை படுக்கைகளிலும், மிதியடிகளிலும் இருந்தன.

எங்கு பார்த்தாலும் தவளைகள், தவளைகள். தவளைகள்.

அவை எங்கிருந்து வந்தன? சிருஷ்டிகர்த்தராகிய தேவன் இராஜாதிபத்தியமுள்ளவர்!

அவர் என்ன உரைத்தாரோ, அதை நிறைவேற்றுவார்.



**140.** அவர் 'பயங்கரமான காட்சிகள் பூமியில் தோன்றுமென்று உரைத்தார். ஸ்திரீகள் கூந்தலைப்போன்ற கூந்தல் கொண்ட வெட்டுக்கிளிகள் (வெளி.9.7)– கூந்தலைக் கத்தரிக்கும் ஸ்திரீகளைப் பீடிப்பதற்காக நீண்ட கூந்தல். சிங்கங்களின் பற்களைப் போன்ற

பற்கள், தேள்களின் கொடுக்குள் போன்ற கொடுக்குகளைக் கொண்ட வால்கள். அவைகள் அநேக மாதங்கள் மனிதரை வேதனைப்படுத்தும்.

141. வாதைகளையும், முத்திரைகளையும், ஏழு இடி முழக்கங்களையும் திறக்க நமக்கு நேரம் வரும் வரைக்கும் காத்திருங்கள்! என்ன நடக்கப்போகிறதென்று பாருங்கள். **ஓ. சகோதரனே, நேரமுள்ள போதே நீ கோசேனுக்கு போய்விடுவது நல்லது. இந்த வெளிப்புறத்துக்கு எந்த கவனத்தையும் செலுத்தாதே.**

★★★★★

தேவனுடைய மகிமையை அவன் மீது
பெற்றவனாய், அவனால் பேசி
ஈக்களை சிருஷ்டிக்க முடிந்தது,
அவனால் பேசி தவளைகள்
தோன்றப்பண்ண முடிந்தது



Exodus 8:5

# வில்லியம் மரியன் பிரன்ஹாம்

---

## செய்தி: ஏன்?

WHY?

ஜூன் 26, 1963 மாலை ஹாட் ஸ்பிரிங்ஸ் ஆர்க்கன்சாஸ், அமெரிக்கா

---

107. மோசே தேவனால் ஊக்குவிக்கப்பட்டு நின்று கொண்டிருந்தான்.

பாவம் முற்றிலுமாக நீக்கப்படாமல் இருந்த போது, அது காளை வெள்ளாட்டுக்கடாக்களின் இரத்தத்தால் வெறுமனே மூடப்பட்டு இருந்தது.

தேவனுடைய மகிமையை அவன் மீது பெற்றவனாய், அவனால் பேசி ஈக்களை சிருஷ்டிக்க முடிந்தது, அவனால் பேசி தவளைகள் தோன்றப்பண்ண முடிந்தது.

ஏனெனில் ஒரு வார்த்தை என்பது சிந்தை வெளிப்படுத்தப்படுதல் ஆகும்,



ஆகவே தேவன் தம்முடைய சிந்தைகளை மோசேயிடம் கொண்டு வந்தார். அவைகளை மோசே வார்த்தைகளாக பேசினான். அந்த வார்த்தை பேசினபோது, முழு உலகமும் தேவனுடைய வார்த்தையினால் கட்டமைக்கப்பட்டது.



# அதுதான் சிருஷ்டி கர்த்தராகிய தேவன் ஒரு சாதாரண மனிதனுக்குள் மறைந்திருத்தலாகும்



வில்லியம் மரியன் பிரன்ஹாம்

## செய்தி: தேவன் எளிமையில் மறைந்திருந்து அதன்பின் அவ்விதமே தம்மை வெளிப்படுத்துதல்

GOD HIDING IN SIMPLICITY, THEN REVEALING HIMSELF IN THE SAME

மார்ச்சு, 17, 1963 காலை

பிரான்ஹாம் கூடாரம் ஜெபர்ஸன்வில், இந்தியானா, அமெரிக்கா

**411.** மோசே, காளை, வெள்ளாட்டுக்கடா இவைகளின் இரத்தத்தின் கீழ் தேவனுடைய வார்த்தை உண்மையென வாயினால் அறிக்கையிட்டான். தேவன் இந்த எளிய மனிதனைத் தெரிந்தெடுத்து அவருடைய

வார்த்தையை அவன் வாயிலேயே போட்டார். அவன் யேகோவாவின் ஊழியக்காரன் என்பதனை நிரூபித்தான். யேகோவா அவனுடன் தரிசனத்தின் மூலம் பேசினார். அவன் நடந்து சென்று தன் கைகளைக் கிழக்கு திசைக்கு நேராக நீட்டினான்.

412. தேவன் அவனுடன் பேசினார் என்று நினைவிருக்கட்டும். அது தேவனுடைய சிந்தையாயிருந்தது. தேவன் எப்பொழுதும் மனிதனை உபயோகிக்கிறார். தேவன் அவனுடன் பேசினார். அது சரி.

அவர் "உன் கையிலுள்ள தடியை கிழக்கு திசைக்கு நேராக நீட்டு, வண்டுகள் உண்டாகக்கடவது என்று சொல்" என்றார்.

**413.** காளை, வெள்ளாட்டுக்கடா இவைகளின் இரத்தத்தின் கீழிருந்த மோசே கீழ்திசைக்குச்சென்று தன் தடியை அதற்கு நேராக நீட்டி, 'வண்டுகள் உண்டாகக்கடவது என்று கர்த்தர் உரைக்கிறார்' என்றான். அதற்கு முன்பு அவர்கள் வண்டுகளைப் பற்றிக் கேள்விப்பட்டதேயில்லை. வார்த்தையானது அப்படியாவதற்கு முன்பு தேவனுடைய

சிந்தையாயிருந்தது. அது பேசப்பட்டபோது வார்த்தையாக வெளிப்பட்டது. அப்படியானால் மோசே பேசினது தேவனுடைய வார்த்தையாகும். அது காளை அல்லது வெள்ளாட்டுக் கடாவின் இரத்தத்தின் கீழிருந்து ஒரு எளிமையான மனித உதடுகளின் மூலம் வெளிவந்தது.

414. அவன் பேசிய மாத்திரத்தில் ஒரு பச்சை வண்டு அங்கு பறந்து வந்தது, அதன் பின்பு ஒவ்வொரு கெஜத்திற்கும் ஐந்து பவுண்டு எடையுள்ள வண்டுகள் காணப்பட்டன. அது

என்ன? அதுதான் சிருஷ்டிகனாகிய மோசேயின் மூலம் பேசப்பட்ட தேவனுடைய வார்த்தையாகும். ஏனெனில், அவன் காளை, வெள்ளாட்டுக்கடா இரத்தத்தின் கீழ் தேவனுடைய சமூகத்தில் நின்று கொண்டிருந்தான், அவன் சொந்த வார்த்தைகள் அவனுடைய வார்த்தையல்ல.

415. ”நீங்கள் என்னிலும், என் வார்த்தைகள் உங்களிலும் நிலைத்திருந்தால், நீங்கள் கேட்டுக் கொள்வதெதுவோ அது உங்களுக்கு அருளப்படும்” (யோ.

15:7). இன்றைக்கு சபை எங்கு நின்று கொண்டிருக்கிறது?

416. “தவளைகள் உண்டாகக்கடவது” என்று மோசே கட்டளையிட்டான். அந்த நாட்டில் ஒரு தவளையும் கிடையாது. ஒரு மணி நேரத்திற்குள் சில இடங்களில் பத்து அடி ஆழத்திற்கு தவளைகள் உண்டாயிருந்தன. அது என்ன? அதுதான் சிருஷ்டி கர்த்தராகிய தேவன் ஒரு சாதாரண மனிதனுக்குள் மறைந்திருத்தலாகும்.

417. இப்பொழுது உங்களை ஒன்று கேட்க விரும்புகிறேன். பாவத்தைப் போக்காமல் அதை

மூடின காளை, வெள்ளாட்டுக்கடா இவைகளின் இரத்தம் ஒரு மனிதனை தேவனுடைய சிருஷ்டிப்பின் வார்த்தையைப் பேசி வண்டுகளை சிருஷ்டிக்கும் நிலையில் வைக்குமானால் பாவத்தை முற்றிலும் போக்கும் இயேசுகிறிஸ்துவின் இரத்தம், ஒரு மனிதன் தேவனுடைய வார்த்தையைப் பேசி ஒரு அணிலைச் சிருஷ்டிக்கச் செய்யும் போது ஏன் இடறுகிறீர்கள்?

418. நீங்கள் தடுமாற வேண்டாம். எளிமையைக் கண்டு நீங்கள் இடற வேண்டாம். அவர்

இன்னும் தேவனாக இருக்கின்றார் என்பதை விசுவாசியுங்கள். ஓ, என்னே! அவர் பாவங்களை மன்னிக்கிறவராயிருக்கிறார். ஓ! நான் எவ்வளவாய் ஆசிக்கிறேன்...

419. மாற்கு 11:23: 'எவனாகிலும் இந்த மலையைப் பார்த்து: நீ பெயர்ந்து, சமுத்திரத்திலே தள்ளுண்டு போ என்று சொல்லி, தான் சொன்னபடியே நடக்கும் என்று தன் இருதயத்தில் சந்தேகப்படாமல் விசுவாசித்தால், அவன் சொன்னபடியே ஆகும்". ஓ...

★★★★★

# இஸ்ரவேல் ஜனங்களை வாக்குத்தத்தம் பண்ணின தேசத்துக்கு வழி நடத்தின அதே கோல், தீர்க்கதரிசி மேய்ப்பனைப் பின்பற்ற மறுத்தவர்களை ஆக்கினைக்குட்படுத்தினது



**வில்லியம் மரியன் பிரன்ஹாம்**

## செய்தி: 64-12-21 அது ஏன் மேய்ப்பர்களாக இருக்க வேண்டியதாயிருந்தது?

133 மோசே; யோகோவா, இந்த மேய்ப்பன்–தீர்க்கதரியில் தம்மை வெளிப்படுத்தினார். அவனுடைய ஊழியத்தையும் அழைப்பையும் இஸ்ரவேல் ஜனங்களின் மூப்பர்களிடத்திலும், பார்வோனிடத்திலும் ரூபகார்படுத்தப்படுவதற்கு அவனுக்கு மூன்று வரங்கள் அளிக்கப்பட்டன. இப்பொழுது இந்த தீர்க்கதரிசிமேய்ப்பனைக் கவனியுங்கள். தேவன்

அவர்களுக்குள் வாசம் செய்கிறார் என்பதை உறுதிப்படுத்த தேவன் எப்பொழுதுமே தமது தீர்க்கதரிசிகளுக்கு இயற்கைக்கு மேம்பட்ட அடையாளத்தை அளிக்கிறார். தேவனுடைய சமூகம் இருக்குமானால், இயற்கைக்கு மேம்பட்ட அடையாளங்கள் நிகழாமல் இருக்க முடியாது. இயற்கைக்கு மேம்பட்டவை தொடராமல் யோகோவா பிரத்தியட்சமானதேயில்லை, அது நிகழ வேண்டும். எனவே தீர்க்கதரிசிகள் தீர்க்கதரிசனம் உரைத்தவை வார்த்தையின்படி

அமைந்திருந்தால், அவைகளை தேவன் உறுதிப்படுத்தி, அவர் இந்த தீர்க்கதரிசிகளுடன் கூட இருந்ததை எப்பொழுதும் நிரூபித்து வந்தார்.

134 இப்பொழுது, முதலாம்- அவர் அளித்த முதலாம் அடையாளம்... இந்த தீர்க்கதரிசி- மேய்ப்பன் (பாருங்கள்), அவனுடைய கோலை ஒரு சர்ப்பமாக மாற்றினார்.

135 இரண்டாவதாக, அவனுடைய கை குஷ்டரோகக் கையாக மாறினது.

136 மூன்றாவதாக, எகிப்திலுள்ள நீலநதியின்

தண்ணீரை எடுத்து அதை இரத்தமாக மாற்றுதல்.

137 இப்பொழுது, அவன் தேவனுடைய உரைக்கப்பட்ட வார்த்தையாயிருந்தான் என்பதை எகிப்தியருக்கும் இஸ்ரவேலருக்கும் ரூபகாரப்படுத்த, அவர் அவனுக்கு மூன்று அடையாளங்களைக் கொடுத்தார்.

138 இப்பொழுது, நினைவிருக்கட்டும், மோசே சிருஷ்டிக்க அழைக்கப்பட்டான்! அது உண்மை. அவன் தரையிலிருந்த புழுதியை எடுத்து ஆகாயத்தில் எறிந்து, “பேன்கள்

வரக்கடவது" என்றான், அப்பொழுது பேன்கள் வந்தன. அவன், "வண்டுகள் வரக்கடவது" என்றான். அப்பொழுது வண்டுகள் வந்தன. "தவளைகள் வரக்கடவது", தவளைகள் வந்தன. இவைகளை அவன் சிருஷ்டித்தான். மனிதனால் சிருஷ்டிக்க முடியாது. ஆனால் அது முதலாவதாக மனிதனே கிடையாது. அது அவருடைய தீர்க்கதரிசி மேய்ப்பனுக்குள் இருந்த யேகோவா! ஆமென்!

139 கவனியுங்கள். அவர் அவனுக்கு அளித்த மூன்றாம் அடையாளம், அவனுடைய தொழிலுடனோ அல்லது

அவனுடனோ சம்பந்தப்பட்டதல்ல; அவனுடைய மூன்றாம் அடையாளம். கவனியுங்கள், முதல் இரண்டு அடையாளங்கள் அவனுடனும் அவனுடைய தொழிலுடனும் சம்பந்தப்பட்டவை. அந்த இரண்டு அடையாளங்களுக்கு மாத்திரமே "ஒரு சத்தம்" இருந்ததாக வேதம் உரைக்கிறது. மற்ற அடையாளத்துக்கு ஒரு சத்தம் இல்லை. ஆனால் அவனுடைய சொந்த சரீரத்திலிருந்து ஜனங்களுக்கு கொடுக்கப்பட்ட அந்த இரண்டு அடையாளங்களுக்கு சத்தம் இருந்தது. ஆனால் மூன்றாம்

அடையாளம், இப்பொழுது கவனியுங்கள், கொடுக்கப்பட்ட மூன்றாம் அடையாளம்... அடையாளம், மூன்றாம் அடையாளம் மரணத்தின் அடையாளம்: அதாவது தண்ணீர் இரத்தமாக மாறுதல். உங்கள்–உங்கள்–உங்கள் இரத்தம் தண்ணீராக மாறினால், அப்பொழுது நீங்கள் இறந்து விடுவீர்கள். இரத்தம் எங்கே உள்ளதோ, சிந்தப்பட்ட இரத்தம், அது ஒரு மரணத்தின் அடையாளம்; அது அப்பழத்தான் பார்வோனுக்கும் இருந்தது. நீல நதியின் தண்ணீரை இரத்தமாக மாற்றும் அடையாளம். நமது

தேவன் நீல நதியின் மேல் தேவனாயிருக்கிறார், அவர் நீல நதியின் தேவனுக்கு தேவனாயிருக்கிறார் என்னும் அவருடைய செய்தியை பார்வோனுக்கு காண்பிப்பதாய் – காண்பிப்பதாய் அமைந்திருந்தது. அவர் எல்லாவற்றின் மேலும் தேவனாயிருக்கிறார். அவர் அந்த தேசத்துக்கு மரணத்தை கொண்டு வரப்போகிறார். அதை குறிப்பதாகத்தான் இரத்த அடையாளம் அமைந்திருந்தது. ஓ, என்னே! நேரடியான மரணத்தின் அடையாளம்: இரத்தமே!

140 ஆனால் மற்ற இரண்டு அடையாளங்களுக்கும் தீர்க்கதரிசின சத்தங்கள் உண்டாயிருந்தன. (நீங்கள் நான் நான் கூறிக்கொண்டிருக்கிற மறை பொருளை நீங்கள் அறிந்து கொள்கிறீர்கள் என்று நான்-நான்-நான் நம்புகிறேன்.) ஆனால் இஸ்ரவேல் ஜனங்களின் எதிர்காலத்தைக் குறித்ததான இந்த இரண்டு அடையாளங்களுக்கும் தீர்க்கதரிசன சத்தங்கள் உண்டாயிருந்தன. (இப்பொழுது அண்மையில் கற்பாறை வெடித்து மேலே எறியப்பட்டபோது,

மலையின்மேல் இருந்த உங்களுக்கு)

141 இப்பொழுது, அவர். அவர்களுக்குதவி செய்ய அவர் இயற்கையை மாற்றப்போகிறார். கோலைக் கவனியுங்கள், சர்ப்பத்தைக் கவனியுங்கள், சிவந்த சமுத்திரத்தைக் கவனியுங்கள், அவர் எதையெல்லாம் செய்தாரோ, அவற்றையெல்லாம். அந்த மேய்ப்பனின் கோல் அவர்கள் செல்வதற்கு வழி உண்டுபண்ணுவதைப் பாருங்கள். மேய்ப்பனின் கையிலிருந்த அந்த கோல் வேத சாஸ்திரம் அனைத்தையும், ஆசாரியர்கள்

சொன்ன அனைத்தையும் உதறித்தள்ளிவிட்டு (மனிதனுக்கு) கூடாத காரியமாகத் தோன்றின அதன் வழியாக அவர்களை நடத்திச் சென்றது. மலைகளில் எரிமலைகள் வெடித்து அதன் குழம்பு நீர் வீழ்ச்சியுடன் கலந்து, அந்த தண்ணீர் நீலநதியுடன் கலந்து அதை இரத்தமாக மாற்றினதாக பார்வோன் எண்ணினான். அதன்பின்பு, தேவன் வானத்திலிருந்து அக்கினியைப் பொழுந்தார். அவர் வானத்திலிருந்து கல் மழையைப் பொழிந்தார், அவர் அவர் பூமியை பேன்களால் நிரப்பினார், இவையனைத்தையும் செய்தார்.

142 அவர் என்ன செய்தார்? அது மேய்ப்பனின் கோலினால், ஒரு-ஒரு பாடபுத்தகத்தினால் அல்ல. ஒரு வேத சாஸ்திரியின் கருத்தல்ல, ஆனால் ஒரு மேய்ப்பனின் கோல்! அதற்கு இன்னும் ஒரு நிமிடத்தில் நாம் நாம் வரப்போகிறோம். மேய்ப்பனின் கோயிலுக்கு அவர் அதை செய்தார். ஒரு ஒரு ஸ்தாபன ஜெபப் புத்தகத்தைக் கொண்டு அல்ல, ஆனால் ஒரு மேய்ப்பனின் கோல். மேய்ப்பனின் கோல் தன் ஆடுகளை வழிநடத்திக் கொண்டிருந்தது, அவர்கள் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட வார்த்தையின்படியுள்ள தேசத்தை

நோக்கிச் செல்லுகையில் வழியைத் தெளிவுபடுத்தியது. இன்றைய மேய்ப்பனின் கோல் தம்முடைய ஆடுகளை வாக்குத்தத்தம் பண்ணைப்பட்ட தேசத்திற்கு வழி நடத்துவது என்ன ஒரு அழகான காரியமாய் உள்ளது. அது எல்லா வேத சாஸ்திரத்தையும், இந்த உலகத்தின் ஒவ்வொரு காரியத்தையும், உலக காரியங்களையும், ஸ்தாபனங்களையும், ஒவ்வொன்றையும் புறக்கணிக்கிறது. அவருடைய வார்த்தையே சத்தியம் என்பதற்கு வழியைத் திறந்து கொடுக்கிறது.

**ஏனென்றால் மேய்ப்பனின் கோல் முன்னோக்கிச் செல்கிறது.**

143 கவனியுங்கள், ஆடுகளை நடத்திச் சென்ற அதே மேய்ப்பனின் கோல். அதை நீங்கள் நம்புகிறீர்களா? அவன் நிச்சயமாக ஆடுகளை நடத்திச் சென்ற அதே கோலைக் கையில் கொண்டு, இஸ்ரவேல் ஜனங்களை எகிப்திலிருந்து விடுவித்தான். நாம் அதைக் குறித்து இன்னும் அதிகம் கூறலாம். ஆனால் முக்கியமானதை வலியுறுத்துகிறேன். அவன் ஆடுகளை நடத்திச் சென்று, அதை புறக்கணித்தவர்கள்மேல்

நியாயத்தீர்ப்பை அனுப்பினான். ஒருவருக்கு ஆசீர்வாதமாயிருந்த அதே கோல் மற்றவருக்கு சாபமாக முடிந்தது. (நோவா பிரசங்கித்த போது,) அவனை காப்பாற்றின அதே தண்ணீர் உலகத்தை ஆக்கினைக்குட்படுத்தினது. இஸ்ரவேல் ஜனங்களை வாக்குத்தத்தம் பண்ணின தேசத்துக்கு வழி நடத்தின அதே கோல், தீர்க்கதரிசி மேய்ப்பனைப் பின்பற்ற மறுத்தவர்களை ஆக்கினைக்குட்படுத்தினது. அது உண்மை. அது ஒரு நியாயத்தீர்ப்பின் கோலாக மாறினது.

## ~ 17 ~



# மோசேயிலிருந்தவர் எகிப்திலும் பெரியவர்



## வில்லியம் மரியன் பிரன்ஹாம்

---

செய்தி: 63-11-10E

## உங்களிலிருக்கிறவர்

---

**88.** மோசேயிலிருந்தவர் எகிப்திலும் பெரியவர்.

எகிப்தின் சேனை உலகிலேயே மிகவும் வீரமுள்ள சேனையாயிருந்தது.

அவர்கள் முழு உலகத்தையுமே ஜெயித்தனர்.

ஆனால் மோசேயிலிருந்தவர் எகிப்தைக் காட்டிலும் பெரியவர்.

ஏனெனில் மோசே எகிப்தை மேற்கொண்டான்.

மோசேயிலிருந்தவர் இயற்கையிலும் மேலானவர்.

தேவன் தமது வார்த்தையை மோசேக்குக் கொடுத்து, “நீ சென்று சூரியன் பிரகாசிக்காமல் இருக்கும்படிக்குக் கட்டளையிடு” என்று கூறினார் என்பதை நீங்கள் எப்பொழுதாவது நினைத்துப் பார்த்ததுண்டா?

சூரியனை பிரகாசிக்கும்படி செய்து மேகங்கள் திரும்பிப் போக வேண்டுமென்று கட்டளையிட முடியும் அல்லது சூரியன்

இருளடையச் செய்யவும் அவரால் முடியும். அவர் தேவன்.

தாம் விரும்பும் எதையும் அவர் செய்யலாம், விசுவாசிக்கும் பிள்ளைகளுக்குள் அவர் இருக்கிறார்.

89. எகிப்தில் ஒரு வண்டுகூட காணப்படவில்லை, ஒருக்கால் அது குளிர்க்காலமாய் இருந்திருக்கலாம்.

கர்த்தர் மோசேயிடம், ”என் வார்த்தையை உரைப்பாயாக, நீ சொல்ல வேண்டியதை உன் சிந்தையில் போடுவேன், நீ சென்று தரையிலுள்ள மண்ணையெடுத்து காற்றில் தூவு” என்றார்.



அவன், ”வண்டுகள் தோன்றக் கடவது என்று கட்டளையிட்டான்-. அப்பொழுது வண்டுகள் ஊர்ந்து வந்து சில மணி நேரத்திற்குள்ளாக அநேக அங்குலம் கனத்திற்கு தரை முழுவதும் பரவின, அது சரியா? சிருஷ்டி கர்த்தர்!.







அங்கு தவளைகள் உண்டாயிருக்கவில்லை. மோசே தன் கோலை நீட்டி, ”தவளைகள் உண்டாகக்கடவது” என்றான். அப்பொழுது தவளைகள் குவியல் குவியலாகத் தோன்றி, தேசம் முழுவதும் நாற்றமெடுக்கத் தொடங்கினது. அது சரியா?





# இயற்கைக்கு மேம்பட்ட சிருஷ்டிக்கும் வல்லமை



## வில்லியம் மரியன் பிரன்ஹாம்

---

# செய்தி: 63-07-28 கிறிஸ்து தேவனுடைய பரமரகசியத்தின் வெளிப்படுதலாயிருக்கிறார்

---

**468.** நீங்கள் கிறிஸ்துவினால் சூழப்பட்டு சிறைவாசிகளாகின்றீர்கள். கிறிஸ்து உங்களுக்குள் வாசம் செய்து, அவருடைய ஜீவன், அடையாளங்கள் இவைகளின் சான்றுகளைத் தோன்றச் செய்கிறார்.! என்னே பாருங்கள், அவருடைய ஜீவனின் அடையாளங்களை அவருடைய உயிர்த்தெழுதலின் சான்றாக அது

கொண்டுவந்து, அந்த நித்திய ஜீவனை உலகிற்கு நிரூபித்துக் காண்பித்து, அவருக்குள் நாம் வாழ்கிறோம் என்பதை உலகிற்கு எடுத்துக்காட்டுகிறது. அதை சற்று யோசித்துப் பாருங்கள்! நமது மீட்பராகிய தேவனுடன் நாம் ஜீவிக்கிறவர்களாயிருக்கிறோம். அந்த நோக்கத்திற்காகவே அவர் நம்மை (சபையை) சிருஷ்டித்தார். அவருடைய சிருஷ்டிக்கும் ஜீவனை அவர் நமக்குள் வைத்திருக்கிறார்.

**469.** மோசே தேவனுடைய வார்த்தையைக் கொண்டவனாய், "வண்டுகள் வரக்கடவது"

என்றவுடன் வண்டுகள் வந்தன. வண்டுகளை சிருஷ்டித்த தேவன் அணில்களையும் சிருஷ்டிக்க முடியும். பாருங்கள்?

470. அவர் என்ன வேண்டுமானாலும் செய்யலாம். அவரால் சிருஷ்டிக்க முடியும். எதை வேண்டுமானாலும் அவரால் செய்ய முடியும். அவர் தேவனாயிருக்கிறார். உங்களுக்குள் இருக்கும் அந்த அதே தேவன், அந்த சிருஷ்டிக்கும் ஜீவன், நீங்கள் பாருங்கள், உங்களுக்குள் இருக்கும் அதனால், முடியு... நீங்கள் சிறைப்பட்டவர்கள். அவர் “பேசு” என்று கூறாமல்

நீங்கள் பேசமுடியாது. ஆனால் நீங்கள் பேசினால், அது தேவனுடைய வார்த்தையாகும். அப்படியாகயிருக்கும் என்று அவன் உறுதிபடுத்தப்படுகிறான். எல்லாம் சரியாக இருக்கும், ஆகவே அவனுக்குத் தெரியும், அது பேசப்படும் போது, அவ்விதமாகவே அது இருந்தாக வேண்டும். பாருங்கள்?

471. மோசே தன் கோலை எடுத்து, "தவளைகள் வரக்கடவது" என்றுரைத்தான். ஏனெனில் தேவன் "தவளைகள் வரக்கடவது" என்று கூறினார். அவன் அதை

உரைக்கும் ஒரு கருவியாக மாத்திரம் இருந்தான். அது உண்மை. அப்பொழுது தவளைகள் எல்லாவிடங்களிலும் தோன்றின. அவை எங்கிருந்து வந்தன? அது யாருக்குமே தெரியாது. அவைகள் முன்பு இருக்கவில்லை. சிருஷ்டிகராகிய தேவன் ஒரு மனிதனின் மூலம் கிரியை செய்து, காரியங்களை, ஒரு ஜீவராசியை சிருஷ்டித்தார்.

472. முதல் தவளையை சிருஷ்டித்த அதே தேவன், இரண்டாம் தவளைகளையும் சிருஷ்டிக்க முடியும். அவர்தான்

எல்லா தவளைகளையும் சிருஷ்டித்தார். நான் என்ன கூறுகிறேன் என்று உங்களுக்குப் புரிகிறதா? முதலாம் அணிலை சிருஷ்டித்தார். இரண்டாம் அணிலை சிருஷ்டிக்கிறார். எந்த அணிலையும் அவரால் சிருஷ்டிக்கக் கூடும். அணில்களே இல்லாத இடத்தில் அவரால் அணில்களை சிருஷ்டிக்க முடியும். அவர் விரும்பின எதையும் செய்யமுடியும். அவர் தேவன் அவர் தேவன். அவருடைய ஜீவன். அதை நினைக்கும் போது எனக்கு நடுங்குகிறது. ஹூ—ஹூம்.

**473. அவரோடு கூட வாழுதல் என்பது – அவருடன் வீட்டிற்குச் சென்று, அவருடன் நித்திய காலமாய் வாழுதல் என்பது – நித்திய ஜீவனைப் பெற்றுக் கொள்ளுதல்.**

**474. அதுதான் தேவனுடைய மகத்தான அன்பின் இரகசியம் வெளிப்படுதல்–அதாவது தேவனும் மனிதனும் ஒன்றாதல். பாருங்கள்? எல்லாமே தேவனும் மனிதனும் ஒன்றாதலே. அங்கு தேவனும் மனிதனும் ஒன்றாயிருந்தனர், இங்கு தேவனும் மனிதனும் ஒன்றாகின்றனர். பாருங்கள்? அது**

**என்ன? அவருடைய ஆவியினாலே நிறையப்பட்டு, அவரே முதன்மையான உயர்ந்த ஸ்தானங்களை கொண்டிருத்தல். அது தேவனுடைய சாதனை – அவர் கிறிஸ்துவுக்குள்ளும், கிறிஸ்து நமக்குள்ளும், நாம் எல்லாரும் ஒன்றாதலே தேவன் அவ்வாறு செய்ததன் நோக்கமாயிருந்தது – பரிசுத்த ஆவி. கிறிஸ்துவில் வெளிப்பட்ட அதே காரியம் தான் இப்பொழுது இங்கு வெளிப்படுகிறது– இயற்கைக்கு மேம்பட்ட சிருஷ்டிக்கும் வல்லமை,**

475. மோசேயின் மூலம், ”தவளைகள் வரக்கடவது” என்று கூறின— என்று கூறின அதே தேவன் தான் தண்ணீர் திராட்சரசமாக மாறக்கடவது” என்று சொன்னார். பாருங்கள்? ஆமென். அது சரியா? (சபையார் “ஆமென்’ என்கின்றனர் — ஆசி) அவர் அதே தேவனாயிருக்கிறார், அந்த அதே ஒருவர்.

476. அவர் மாறுவதில்லை. அது, மனிதனுக்குள் தேவன், அது அவர் வெளிப்படுதல். அதைத் தான் அவர் வெளிப்படுத்துகிறார். அதைத் தான் அவர் செய்ய

முயல்கிறார், ஆகவே தேவனுடைய சொந்த வார்த்தையானது அதை வெளிப்படுத்திக் கொண் டிருக்கிறது. மனிதன் எதையும் சிருஷ்டிக்க முடியாது என்றும், தேவனே சிருஷ்டிகர், அது மனிதனல்ல, அது மனிதனுக்குள் இருக்கும் சிருஷ்டிகர் என்றும் காண்பிக்கிறது. ஆகவே அது இன்னுமாக மனிதன் அல்ல; அது மனிதன் அல்ல; அது இப்பொழுது தம்முடைய சபையாக இருக்கின்ற, மனிதனுக்குள், சிருஷ்டிகராகிய தேவன். ஆமென்.

★★★★★

Only believe, Only believe
All things are possible,
Only believe.

சகோ. பினேகாஸ்
போன்: 8838623242, 9551855108
Email: jebakumarsa@gmail.com
www.thefinish.in